**எட்டுத் திக்கு யானை**

638.ஆமயி ராவதம் புண்டரீ கங்குமு தம்மஞ்சனம்
வாமனம் புட்பதந்தஞ் சாறுவ பூம வருமதத்துத்
தேமலி யுஞ்சுப் பிரதீப மென்னத் திசையெட்டினு
நாம மிகுங்கரி நாற்கோடுடைத்தது நன்னுதலே. 48

**நவ கண்டம்**

639.தெற்கு வடக்குக் குணக்கு பாலெனச் செப்புதற்கே
யெக்குல வுந்திசை தன்னில் விதேய மிரேவதமாந்
தற்குறிப் பாகிய பேரெட்டு மத்திமந் தன்னுடனே
நற்குறிப் பேற்ற திவையென லாகு நவகண்டமே. 49

**நவமணி, காணப் படாமணி**

640.மாணிக்க முத்து மரகத நீலம் வயிரந்துப்பு
யாணர்க் கதிரின் வயிடு ரியம்பற்ம ராகமிரு
ணாணத் திகழொளி கோமே தகமென் னவமணியாங்
காணப்படாமணி சிந்தா மணியக் கவுத்துவமே 50

**நவதாரணை, நவரசம்**

641.நாம மிலக்கம் பரிகரி கஞ்சம் நயந்தசெய்யுட்
டாம வெழுத்துச் சதுரங்க நீர்நவ தாரணையாங்
காம மவல முருத்திர மச்சஞ்சிங் காரநகை
யேமறு வீரம் வியப்பே கருணை ரசநவமே. 51

**நாரணன் பத்து அவதாரம்**

642.மீனாமை கேழல் நரசிங்கம் வாமன மேபரசு
ராம னிராம னலாயுத னாகு வடமதுரை
யானாகுங் கிட்டினன் கற்கி யுடனவ தாரம்பத்துந்
தானாகி வையம் புரப்பவ னாரணன் றானென்பரே. 52

**சிற்ப வினைக்குறிப்பு பத்து, தசாங்கம்**

643.கல்லுமண் செங்கல் லுலோக மரஞ்சுதை காமர்வண்ணஞ்
சொல்லிய சந்த மெழுகுளம் பத்துஞ் சிற்பவினை
நல்ல நதிமலை மாவாசி யூர்தொடை நாடுகொடி
வெல்லு முரசுட னாணை தசாங்க வினைப்பயனே. 53

**உயிர்வேதனை பன்னிரண்டு, அரசர் ஐம்பெருங்குழு**

644.வாதம் புனல்கன லாயுதம் வல்விட மாவசனி
சீதமத் தாகம் பசிதெரியாச்சின நோய்மருந்தா
மாதுய ராறிரண் டாமுயிர்க் கைங்குழு மந்திரந்
தூது புரோகிதன் சேனாபதிபொற நுரயற்கே. 54

**பதினெட்டு மொழியாளர்**

645.அங்கர் கலிங்கர் கவுசலர் சோனக ராரியரே
சிங்களர் மாளுவர் மாராடர் மாகதர் சிந்தவரே
கொங்க ருமணர் களப்பரர் சீனர்கள் கொங்கணரே
வங்கர் துளுவர் மலையாளர் பத்தெட்டு வாசகரே. 55

**பதினெண் கணம்**

646.சுரரோ டசுர ரிராக்கதர் சித்தர் தொழுமிசைக்கிம்
புருட ரியக்கரே வித்தி யாதரர் நன்முனிவர்
கருடர் பிசாசரு மாகா சியர்கந் திருவர்தக்
கருகர்வெம் பூதரு மிப்போக பூமிப்பன் னெண்கணமே. 56

**அரசர் பதினெண் கணம்**

647.கரணத் தினவர். . . . . ரேகடை காப்பர்சுற்றம்
மருமக் கரிமிசை யோர்பரி வீரர் படைத்தலைவ
ரருமைப் பதியினர் தாமென்பர் வேதிய னோடுநட்டோ
ரரசற் கடும்படை யனமா மருததனி... தே. 57

**உலகர்க்குறுதுயர் பதினெட்டு**

648.வெறுப்புப் பசியி..... னீர் வேட்டல் வெகுளியின்பம்
பிறப்புக் கிலேச மதமோ டதிசயம் பேதமையே
யிறப்புச் செனுநரை பொச்சாப்பு பகை...நினைப்
புறதச செயலற வேலா வுலகர்க் குறுதுயரே. 58

**பதினெண் புராணம்**

649.மச்சம் பிரம வராகம் வயினுவ மார்க்கண்டை
மச்ச மிலிங்கம் பவுடிகம் வாமனங் காந்தர்ப்ப
மெச்சுகதஞ் சைவம் மாக்கினே யம்பிர மாண்ட மிகுநார
கச்சபங் காருட மற்றும் புராணக் கலைபலவே. 59

**முப்பத்திரண்டு அறம்**

650.ஆதுலர்க் குண்டியறுசமை யத்தருக் காமுணவு
மோதி னருட்சிறைச் சோற்றத் தொதன முண்கண்மருந்
தேதில் பிணஞ்சுடல் கண்ணாடி நோய்மருந்தின்பமெண்ணெ
காதல் மகப்பெறு வித்தல் பிற...... லொடே. 60

651.சந்ததி பெற்றல் முலைப்பால் மடந்தடங் காவிலங்க
னந்தமில் வண்ணார் நாவிதர் பட்டார் வணைது.....
பந்தாமட் டுணி சனநாளோலை களாப பாலுநல்க
விந்தொழில டறினன் பண்டமுப்பத் திரண்டறமே. 61

**பிள்ளைப் பாட்டு**

652.திங்க ளிரண்டினி லைந்தினி லேழினி லொன்பதினி
லங்கொரு பத்தொன்றிற் காப்புச் செங்கீரையமுதுடன்றால
தங்குசப் பாணிமுத் தங்கூறலாண்டு தனிற்புதல்வ
விங்கெதிர் வாவெனல் பூச்சூட்டல் திங்களோ ரெட்டினிலே

**ஆண்பிள்ளைப் பாட்டு**

653.ஆண்டிரண் டுற்ற சிறுபடைகொட்ட லனுகியமு
வாண்டினிற்கோழகந் தான்செய்தல் சிற்றி லழித்தலைந்தா
மாண்டின்மை யாடல் சுரிகைமெய் சேர்த்த லவையடைவ
வாண்டினிற் பாடுத லாண்பிள்ளைப் பாட்டுக் கடைவதுவே

**பெண்பிள்ளைப் பாட்டு**

654.முன்னவை யாண்டின் முடித்தலவ்வாண்டெல்லைமூன்றுதன்
லுன்னு கும்பகனைந்தொட தெல்லையினோங்குவில்லே
டன்னை வழிபட னீராடல் தண்கட லாடல்சிற்றில்
பன்னலமண செ..பொன்னூசல் பெண்பிள்ளைப்பாட்டென்பவே

**பெண்டிர் இலக்கணம்**

655.நல்லுரை யாடியு நல்லிசை யோர நகைவிளைத்து
மெல்லென வொல்கி விலங்கி நடந்தும் விழிவலையார்
கொல்லுவர் போலெதிர் நோக்கியு நாணியுங்கொங்கைதிற
யொல்லை நலிந்து மழுதுட னேங்கி யொடுங்கியுமே. 65

656.மருங்கினிற் கைவைத்து வாகியு னெற்றியின் வைத்தொருவ
யொருங்குட னாடியும் மெண்ணான தாகியு முன்னழிந்த
குரங்கயின் கூந்தலி லேந்துகை வீதியுங் கோதுசெய்து
மிரங்கியு மெல்லென்று செய்வதுபெண்டிர்க்கிலக்கணமே. 66

**உற்பாதம், ஏழு மேகம்**

657.அரவொடு திங்கட் கதிர்பரி வேட மழல்புகையிந்
திரவி வடுவழ லுற்பாதங் காலொளி தீப்புகையே
மருவுறு நீலிநி நீவ வாருணி வாரியுட
நிருமைய வாம்புட்கலாவந்த மேமென் றேழ்முகிலே. 67